

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

TAMILNADU POWER DISTRIBUTION CORPORATION LIMITED
TNPDCL

அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

# வீட்டு நுகர்வோருக்கான கிரிட்டுடன் இணைக்கப்பட்ட

## மேற்கூரை சூரிய மின்னாலை அமைப்பு

VASUDHA FOUNDATION
Green ways for a good earth!



# 1. கிரிட்டுடன் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய மின்னாலை அமைப்பு பற்றிய விவரங்கள்




## 1.1 ஆர்டிஎஸ் (Rooftop Solar – RTS) எனப்படும் கிரிட்டுடன் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய மின்னாலை என்றால் என்ன?

கிரிட்டுடன் இணைக்கப்பட்ட மேற்கூரை சூரிய மின்னாலை (Rooftop Solar – ஆர்டிஎஸ்) என்பது சூரிய தகடுகளை உடையது. இத்தகடுகள் சூரிய சக்தியில் இருந்து நேரடி மின்னோட்டம் (DC) உள்ள மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இந்த அமைப்பில் உள்ள மின்சக்தி சீராக்கி/மின்மாற்றி (Power Conditioning Unit/ Inverter), நேரடி மின்னோட்டத்தை மாறுதிசை மின்னோட்டமாக (AC) மாற்றி கிரிட்டிற்கு அல்லது வீட்டு உபயோகத்திற்கு அனுப்பி வைக்கிறது.

## 1.2 ஆர்டிஎஸ் அமைப்பின் முக்கிய கூறுகள் யாவை?

- **சூரிய தகடுகள்:** இத்தகடுகள் சூரிய ஆற்றலை நேரடி மின்னோட்ட மின்னாற்றலாக மாற்றுகின்றன. ஆர்டிஎஸ் அமைப்பில் பயன்படுத்தப்படும் தகடுகள் பெரும்பாலும் படிக சிலிக்கான் பொருட்களால் உருவாக்கப்படுகின்றன. தேவைக்கு ஏற்ப பல தகடுகள் வரிசைகளாக ஒன்றிணைக்கப்படுகின்றன.
- **மின்மாற்றி (Inverter):** சூரிய ஒளி மின்னழுத்த தகடுகள் உற்பத்தி செய்யும் நேரடி மின்னோட்ட வெளியீட்டை (டிசி) மாறுதிசை மின்னோட்டமாக மின்மாற்றி மாற்றுகிறது. மேலும், இந்த இன்வெர்ட்டர் கிரிட்டுடன் ஒத்திசைகிறது, இதனால் மாட்யூலில் இருந்து உருவாக்கப்படும் மின்சாரம் கிரிட்டில் செலுத்தப்படும்.
- **மாட்யூல் ஏற்ற கட்டமைப்பு (Module Mounting Structure):** இது சூரிய ஒளி தகடுகளை அதன் ஆயுட்காலம் வரை அனைத்து வானிலை நிலைகளிலும் உறுதியாக தாங்கிப் பிடிக்கிறது. இந்த கட்டமைப்பு ஒளித் தகடுகளை சில குறிப்பிட்ட கோணங்களில் அல்லது திசைகளில் நிலையாக நிற்கும்படி செய்கிறது. ஆனால் எல்லா நேரத்திலும் சூரியன் இருக்கும் திசையிலேயே தொடர்ந்து இருக்குமாறு தனது கோணத்தை மாற்றிக் கொண்டே இருக்கும் மாட்யூல் ஏற்ற கட்டமைப்புகளும் உள்ளன. இவை சூரிய ஒளி திசைக்காட்டிகளின் (Trackers) உதவியுடன் இயங்குகின்றன.

- **இருதிசை மீட்டர்கள் (Bi-direction Meters):** மீட்டர்கள் மின்சார உற்பத்தி அல்லது நுகர்வு ஆகியவற்றை பதிவு செய்ய பயன்படுகின்றன. இருதிசை மீட்டர்கள் (அல்லது நெட் மீட்டர்கள் – Net-Meters) ஆர்டிஎஸ் அமைப்பு க்ரிட்டிற்கு செலுத்தும் மின்சாரத்தையும், க்ரிட்டிலிருந்து உள்வரும் மின்சாரத்தையும் கணக்கெடுக்க பயன்படுகின்றன.
- **அமைப்பின் இருப்பு:** இவை கேபிள்கள், ஸ்விட்ச் போர்டுகள், ஜங்ஷன் பாக்ஸ்கள், நிலத்தடி அமைப்புகள், சர்க்யூட் பிரேக்கர்கள், பியூஸ்கள், மின்னல் பாதுகாப்பு அமைப்புகள் போன்றவற்றை கொண்டுள்ளது.

### 1.3 கிரிட்டுடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பில் பேட்டரி உள்ளதா?

கிரிட்டுடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பில் பேட்டரி கிடையாது.

### 1.4 மின்வெட்டின்போது க்ரிட்டுடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பு ஒரு இன்வெர்ட்டராக செயல்படுமா?

இன்வெர்டர் இயங்குவதற்கு க்ரிட்டில் இருந்து ஒரு குறிப்பு மின்னழுத்தம் தேவைப்படுகிறது. மின்வெட்டின்போது இந்த மின்னழுத்தம் இருக்காது. அதனால் ஆர்டிஎஸ் அமைப்பு இன்வெர்டர் போல் செயல்படாது.

### 1.5 ஒரு கிலோவாட் பீக் (kWp) ஆர்டிஎஸ் அமைப்பதற்கு எவ்வளவு இடம் தேவைப்படும்?

ஒரு கிலோவாட் பீக் ஆர்டிஎஸ் அமைப்பதற்கு பொதுவாக 10 சதுர மீட்டர் நிழலில்லா இடம் தேவைப்படுகிறது. இருப்பினும், சூரிய மின் தகடுகளின் திறன், அவற்றின் அமைப்பு போன்றவற்றை பொறுத்து இடத் தேவை மாறுபடலாம்.

### 1.6 சூரிய மின் தகடுகளுக்கு நிழலில்லா இடம் ஏன் தேவைப்படுகிறது?

சூரிய மின் தகடுகள் (மற்றும் அதனுள் இருக்கும் செல்கள்) அதிகபட்ச மின்னாற்றலை உற்பத்தி செய்வதற்கு தடையில்லாத சூரிய ஒளி அவசியம். ஏதேனும் ஒரு பகுதியில் நிழல் விழுந்தால் கூட, மின் உற்பத்தி பெருமளவில் குறைந்து, நிறுவப்பட்ட மொத்த அமைப்பின் திறனும் வீணாகிவிடும்.

### 1.7 ஆர்டிஎஸ் அமைப்புகளுக்கு எந்த வகையான மேற்கூரைகள் பொருத்தமானவை?

போதுமான எடையைத் தாங்கும் திறன் கொண்ட எந்த வகையான கூரையிலும் ஆர்டிஎஸ் அமைப்புகளை நிறுவ முடியும்.

### 1.8 எனது கூரையில் நிறுவக்கூடிய RTS அமைப்பின் அதிகபட்ச கொள்ளளவு என்ன?

ஆர்டிஎஸ் அமைப்பின் அதிகபட்ச திறன், அனுமதிக்கப்பட்ட மின்சார சுமைக்கு (Electrical Load) சமமாக இருக்க வேண்டும். நிழலில்லா பகுதி, கூரை பரப்பளவு கிடைப்பது போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் உண்மையான திறன் மாறுபடலாம்.

### 1.9 ஒரு கிலோவாட் பீக் ஆர்டிஎஸ் அமைப்பு தினமும் எவ்வளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யும்?

தெளிவான சூரிய ஒளி உள்ள நாளில், ஒரு கிலோவாட் பீக் (1 kWp) ஆர்டிஎஸ் அமைப்பால் ஒரு நாளைக்கு 4 முதல் 5.5 யூனிட்கள் வரை மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

### 1.10 ஆர்டிஎஸ் அமைப்பிலிருந்து ஆண்டு முழுவதும் நிலையான/ஒரே மாதிரியான மின்சாரம் கிடைக்குமா?

**வாய்ப்பில்லை.** வெப்பநிலை மற்றும் சூரிய கதிர்வீச்சு போன்ற பல்வேறு காரணிகளைப் பொறுத்தே ஆர்டிஎஸ் அமைப்பிலிருந்து கிடைக்கும் தினசரி மின் உற்பத்தியின் அளவு அமையும். இவை ஆண்டு முழுவதும் ஒவ்வொரு நாளும் ஒரே மாதிரியாக இருக்காது.

### 1.11 ஆர்டிஎஸ் அமைப்பிலிருந்து 25 ஆண்டுகளுக்கும் ஒரே வருடாந்திர மின்சாரம் எனக்குக் கிடைக்குமா?

பொதுவாக ஆர்டிஎஸ் அமைப்பின் ஆயுள் காலம் 25 வருடங்கள் ஆகும். ஆனால் இவ்வமைப்பின் மூலம் வருடம் முழுவதும் ஒரே மாதிரியான மின்சாரம் கிடைக்காது. சூரிய ஒளி மற்றும் வெளிப்புறச் சூழல் ஆகியவற்றைப் பொறுத்து, சூரிய மின் தகடு தனது மின் உற்பத்தி திறனை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கிறது. இந்த தேய்மானம் காரணமாக உற்பத்தியாகும் மின்சார அளவும் குறையும்.

### 1.12 கிரிட்டுடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பின் நன்மைகள் என்ன?

- மின் கட்டணத்தில் சேமிப்பு.
- காலியான கூரைக்கு உபயோகமான பயன்பாடு, புதிய நிலம்/இடம் தேவையில்லை.
- குறைந்த காலத்தில் முதலீடு செய்த பணத்தில் இருந்து வருவாய்.
- புதிதாக மின் விநியோக கம்பிகள் அமைக்கத் தேவையில்லை.
- மின் நுகர்வு மற்றும் உற்பத்தி ஒரே இடத்தில் இருப்பதால் மின் இழப்புகள் குறைகின்றன.
- கடைநிலை கட்ட மின்னழுத்தம் (voltage) அதிகரிப்பு மற்றும் கிரிட்டில் உள்ள நெரிசலை குறைக்கிறது
- கார்பன் வெளியேற்றம் குறைவதால் நீண்டகால மின்சக்தி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு.
- பகல் நேர அதிகபட்ச சுமைகளை சிறந்த முறையில் நிர்வகித்தல்.
- நிறுவனங்களுக்கு தங்கள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி கொள்முதல் கடமைகளை பூர்த்தி செய்ய உதவுகிறது

## 2. அமைப்பின் செலவு மற்றும் மானியங்கள்

### 2.1 க்ரிட்டுடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவ சராசரியாக எவ்வளவு செலவு ஆகும்?

விற்பனையாளர்கள் மற்றும் அமைப்பில் பயன்படுத்தப்படும் பாகங்களின் தரத்தைப் பொறுத்து செலவு மாறுபடும். சராசரியாக ஒரு கிலோவாட் பீக் (kWp) திறன் உள்ள ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவ ரூ.60 ஆயிரம் முதல் ரூ.70 ஆயிரம் வரை தேவைப்படலாம்.

### 2.2 மத்திய அரசிலிருந்து என்ன மானியங்கள்/நிதி உதவி கிடைக்கிறது?

மத்திய அரசின் நிதி உதவி (அல்லது மானியம்) வீட்டு உபயோகத்திற்கான கிரிட்டுடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் திட்டங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது

**வீட்டு நுகர்வோருக்கான மத்திய அரசின் நிதி உதவி**

| மின் உற்பத்தி நிலைய திறன் | கிடைக்கும் மானியம் |
|---|---|
| 1kW – 2 kW | ₹30,000 – ₹60,000/– |
| 2kW – 3 kW | ₹60,000 – ₹78,000/– |
| 3 kW க்கு மேல் | ₹78,000/– நிலையான உச்ச வரம்பு |

### 2.3 வீட்டு உபயோகத்திற்கான மானியம் முதலிலேயே வழங்கப்படுமா அல்லது நுகர்வோரே முழு செலவையும் முதலில் ஏற்க வேண்டுமா?

ஆம், ஆர்டிஎஸ் அமைப்பின் முழுச் செலவையும் நுகர்வோரே முதலில் செலுத்த வேண்டும். அரசாங்க மானியம் நேரடிப் பலன் பரிமாற்ற (Direct Benefit Transfer) ஏற்பாட்டின்படி நுகர்வோரின் வங்கிக் கணக்கிற்கு பின்னர் செலுத்தப்படும்.

### 2.4 அரசு இத்திட்டத்தை செயல்படுத்த ஏதேனும் விற்பனையாளர்களை பட்டியலிட்டுள்ளதா?

உங்கள் வளாகத்தில் சூரிய சக்தி அமைப்புகளைப் பயன்படுத்தக்கூடிய பல விற்பனையாளர்களை TANGEDCO பட்டியலிட்டுள்ளது.

விற்பனையாளர்களின் பட்டியலை இங்கே அணுகலாம்: https://pmsuryaghar.gov.in/#/registered-vendors

### 2.5 ஆர்டிஎஸ் விற்பனையாளர்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது? கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் என்ன?

ஒரு விற்பனையாளரைத் தேர்ந்தெடுக்கும்போது, அமைப்பின் விலையுடன் கூடுதலாக பின்வரும் காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்:

- முழு அமைப்பு மற்றும் பாகங்களுக்கு அளிக்கப்படும் உத்தரவாதம்
- ஆற்றல் உற்பத்தி மதிப்பீடுகள், உற்பத்தி திறன் மற்றும் அதற்கான உத்தரவாதம்.
- உங்கள் பகுதியில் தேவையான சேவை மையம் அல்லது சேவைக்கான ஏற்பாடுகளை செய்ய விற்பனையாளர் தயாராக உள்ளாரா என்று தெரிந்து கொள்ள வேண்டும்.
- விற்பனையாளரின் முந்தைய நிறுவல்கள் பற்றிய பதிவுகள், சேவை பற்றி பழைய வாடிக்கையாளர்கள் சொல்லும் அனுபவப் பகிர்வுகள்

### 2.6 மின்சார விநியோக நிறுவனத்திற்கு (DISCOM) நான் எப்படி பணம் செலுத்த முடியும்?

நெட் மீட்டரிங் மூலம் உங்கள் ஆர்டிஎஸ் அமைப்பு கிரிட் உடன் இணைக்கப்பட்டுள்ளதால், மின்சார விநியோக நிறுவனம், நுகர்வோர் வளாகத்தில் நிறுவப்பட்ட நெட் (நிகர) மீட்டரால் வழங்கப்படும் அளவீட்டின் அடிப்படையில் ஒரு பில்லை உருவாக்கும். நுகர்வோர் நிகர யூனிட் பயன்பாட்டுக்கு மட்டுமே (பயன்படுத்திய மின்சார யூனிட்டுகளில் இருந்து உங்கள் ஆர்டிஎஸ் அமைப்பில் இருந்து உற்பத்தி செய்யப்பட்டு கிரிட்டிற்கு செலுத்தப்பட்ட மின்சார யூனிட்டுகளை கழித்த பின் நீங்கள் உபயோகித்த நிகர மின்சாரத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளும்) பணம் செலுத்த வேண்டும்.

### 2.7 ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவுவதன் மூலம் எனது மாதாந்திர மின்சார கட்டணத்தை 'பூஜ்ஜியமாக' குறைக்க முடியுமா?

மிகவும் அரிதான சந்தர்ப்பங்களில் சாத்தியப்படலாம். ஏனெனில் உங்கள் வீட்டிற்கு தேவையான மொத்த மின்சாரத்தையும் உங்கள் ஆர்டிஎஸ் அமைப்பே உற்பத்தி செய்திருந்தாலும் பொதுவாக சில குறைந்தபட்ச, நிலையான கட்டணங்களை நீங்கள் செலுத்த வேண்டியது இருக்கலாம்.மற்றபடி ஒட்டு மொத்த பில்லில் பெரிய பங்கு வகிக்கும் 'மின்சார பயன்பாட்டிற்கான கட்டணத்தை' பூஜ்ஜியமாகக் குறைக்க முடியும். அதற்கு ஏற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஆர்டிஎஸ் அமைப்பை உகந்த முறையில் வடிவமைத்து, நிறுவி, பராமரிக்க வேண்டும்.

## 3. செலவு பொருளாதாரம் (விலை மற்றும் சேமிப்பு) கிரிட் உடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பிலிருந்து கிடைக்கும் சேமிப்பு

### 3.1 கிரிட் உடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பிலிருந்து எவ்வளவு சேமிப்பு எதிர்பார்க்கப்படுகிறது?

கிரிட் உடன் இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பு ஒவ்வொரு நுகர்வோரின் மாதாந்திர மின்சார கட்டணத்திலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் மானியத்தால், ஆர்டிஎஸ் அமைப்பின் நிகர விலை கணிசமாக குறைகிறது. தமிழ்நாட்டில் 2kW அமைப்பிலிருந்து கிடைக்கும் சராசரி மாத உற்பத்தி 270 யூனிட்கள் ஆகும். மாதாந்திர சேமிப்பு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| விவரம் | யூனிட் | மதிப்பு/ அளவு |
|---|---|---|
| திறன் – kWp | kWp | 2 |
| ஒரு kWpக்கான விலை (தோராயமாக) | ₹ | 60000 |
| அமைப்பின் விலை | ₹ | 120000 |
| மொத்த மானியம் | ₹ | 60000 |
| அமைப்பின் நிகர விலை | ₹ | 60000 |
| மாதத்திற்கு உற்பத்தி செய்யப்படும் யூனிட்கள் – kWh | kWh | 270 |
| சராசரி ஒரு யூனிட் விலை | ₹ | 6 |
| மாதாந்திர மின்சார கட்டணத்தில் சேமிப்பு | ₹ | 1620 |
| முதலீட்டு மீட்பு காலம் (தோராயமாக) – ஆண்டுகள் | Year | 3.08 |
| மின் அமைப்பின் ஆயுட்காலம் – ஆண்டுகள் | Year | 25 |

## 4. கிரிட் உடன் இணைக்கப்பட்ட RTS அமைப்பிற்கான மீட்டரிங் ஏற்பாடு

### 4.1 நெட் மீட்டரிங் என்றால் என்ன?

அனைத்து சூரிய மின்னாற்றல் அமைப்புகளும் சூரியன் இருக்கும் பகல் நேரத்தில் மட்டுமே மின்சாரத்தை உருவாக்குகின்றன. நெட் மீட்டரிங் அமைப்புகளில், அப்படி பகலில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தப்படுகிறது. தேவைக்கு மேல்

உற்பத்தியாகும் அதிகப்படியான மின்சாரம் கிரிட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆனால், மேகமூட்டம் போன்ற காரணங்களால் சூரிய ஒளி போதுமானதாக இல்லாத சமயங்களில், வீட்டு தேவைகளுக்கு கிரிட்டிலிருந்து மின்சாரம் எடுக்கப்படுகிறது. இப்படி இரு திசைகளிலும் ஆற்றல் ஓட்டத்தைப் பதிவு செய்வதே நெட் மீட்டரிங் எனப்படும். மேலும் நெட் மீட்டரிங் மூலம் கட்டண காலத்தின் முடிவில், பயன்படுத்தப்பட்ட நிகர மின்சக்தியும் கணக்கிடப்படுகிறது. அந்த நிகர மின்சாரத்திற்கு உரிய பணத்தை மட்டும் நுகர்வோர் செலுத்தினால் போதும்.




### 4.2 கிரிட் உடன் இணைக்கப்படாமல், சொந்த பயன்பாட்டிற்காக மட்டும் ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவ முடியுமா?

தாராளமாக. கிரிட் உடன் இணைக்கப்படாத ஆர்டிஎஸ் மின் நிலையங்கள் பொதுவாக "மீட்டர் பின்னால் உள்ள மின் நிலையங்கள்" என்று அழைக்கப்படுகின்றன. பொதுவாக கிரிட் உடன் இணைக்கப்படாத ஆர்டிஎஸ் அமைப்பிற்கு மானியம் தரப்படுவதில்லை (வீட்டு நுகர்வோர் உட்பட). இந்த அமைப்புகளுக்கும் மாநில அரசுகளால் வரையறுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பொருந்தும்.

## 5. கிரிட்–இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவுதல்

### 5.1 கிரிட்–இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவுவதற்கு நான் எப்படி விண்ணப்பிக்க வேண்டும்?

வீட்டு உபயோகிப்பாளர்கள் கிரிட்–இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவுவதற்கு PM – சூர்யா கர்: முஃப்த் பிஜ்லி யோஜனா தேசிய இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். அந்த இணையதளத்திற்கான இணைப்பு: www. pmsuryaghar.gov.in.

### 5.2 நான் எனது வசிப்பிடத்தை மாற்றினால், எனது ஆர்டிஎஸ் அமைப்புக்கு என்ன ஆகும்?

ஆர்டிஎஸ் அமைப்பு அதன் தனித்தனி பகுதிகளை சேர்த்து வைத்து உருவாக்கப்பட்ட அமைப்பு. எனவே இதை எளிதாக பிரித்து உங்கள் புதிய வசிப்பிடத்திற்கு சிரமமில்லாமல் மாற்ற முடியும்

### 5.3 மானியத்தை பெற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட சூரிய தகடுகளையே பயன்படுத்த வேண்டுமா?

ஆம். மானியத்துடன் கூடிய ஆர்டிஎஸ் அமைப்புகளுக்கு உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட சூரிய ஒளி செல்களுடன் கூடிய, உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஒளிமின்னழுத்த (PV) தகடுகள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் தகவலுக்கு, பிப்ரவரி 17, 2025 அன்று மத்திய அரசு வெளியிட்ட அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்களின் (ALMM) பட்டியலைப் பார்க்கவும்: https://mnre.gov.in/en/approved-list-of-models-and-manufacturers-almm/

## 5.4 பயனாளிகளுக்கான கிரிட்–இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பை நிறுவுவதற்கான பொதுவான வழிமுறைகள் என்ன?

### பதிவு
அதிகாரப்பூர்வ வலைத்தளத்தைப் பார்வையிடவும் (https://pmsuryaghar.gov.in) பதிவு செய்வதற்கான தனிப்பட்ட விவரங்களை வழங்கவும்

### விண்ணப்பம்
இரண்டு வழிகள் உள்ளன:
- விண்ணப்பதாரர் விண்ணப்பத்தை நிரப்ப ஒரு விற்பனையாளரைத் தேர்ந்தெடுக்கிறார்
- விண்ணப்பதாரர் தாமாகவே விண்ணப்பத்தை நிரப்புகிறார்

### சாத்தியக்கூறு
தேவையான அனைத்து ஆவணங்களையும் பதிவேற்றிய பிறகு. விண்ணப்பம் தானாக உருவாக்கப்பட்ட சாத்தியக்கூறு ஒப்புதலுக்கு ஒதுக்கப்படும்.

### விற்பனையாளர் தேர்வு
விற்பனையாளர்களின் பட்டியல்களிலிருந்து எம்பேனல் செய்யப்பட்ட விற்பனையாளரைத் தேர்ந்தெடுக்கலாம்.

### பதிவேற்ற ஒப்பந்தம்
விண்ணப்ப செயல்முறை முடிந்ததும், அது பதிவேற்ற ஒப்பந்த ஆவணத்திற்கான விற்பனையாளரின் கட்டத்திற்கு நகரும்.

### நிறுவல்
நிறுவிய பின், விற்பனையாளர் நிறுவல் விவரங்களை நிரப்புவார், அதாவது, இன்வெர்ட்டர் விவரங்கள், DCR சான்றிதழ், ஆலை புகைப்படம் மற்றும் நிகர மீட்டருக்கு விண்ணப்பிப்பார்.

### ஆய்வு
DISCOM அதிகாரிகள் ஆய்வை மேற்கொள்வார்கள், தேவை பூர்த்தி செய்யப்பட்ட பிறகு, நிகர மீட்டர் நிறுவப்படும்.

### திட்ட ஆணையிடுதல்
நிகர மீட்டரை நிறுவிய பிறகு, போர்டலில் இருந்து ஒரு ஆணையிடும் சான்றிதழைப் பெறவும்

### மானியக் கோரிக்கை
வங்கி விவரங்கள் மற்றும் தேவையான அனைத்து விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து, பின்னர் மானியத்தை மீட்டெடு என்பதைக் கிளிக் செய்யவும்.

### மானியம் வழங்கல்
30 நாட்களுக்குள் மானியம் பெறுங்கள்.

## 5.5 விண்ணப்பிக்கும்போது என்ன ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும்

ரத்து செய்யப்பட்ட காசோலை, பாஸ்புக் போன்ற வங்கி தொடர்பான ஆவணங்கள் மட்டுமே கூடுதலாக, நுகர்வோரின் பெயர் வங்கிக் கணக்கிலும், டிஸ்காம் மின்சார கட்டணத்திலும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். பெயர்களில் முரண்பாடு இருந்தால், நுகர்வோர் டிஸ்காம்/வங்கியுடன் பெயரைப் புதுப்பிக்க வேண்டும். மின்சாரக் கட்டணத்தைப் பதிவேற்றுவது விருப்பத்திற்குரியது.

## 5.6 முழு செயல்முறையிலும் ஏதேனும் கேள்விகள் இருந்தால், புகார்களை எங்கு தெரிவிக்கலாம்?

நுகர்வோர் நோஷனல் போர்ட்டலில் உள்ள குறை தீர்க்கும் பிரிவின் கீழ் புகார் அளிக்க வேண்டும். குறை தீர்க்க பின்வரும் இணைப்பு – https://pmsgg.in/

**முக்கிய பின் குறிப்பு:** மேற்கண்ட பயனுள்ள கேள்வி பதில்கள் தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே. இந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த உரிமைகோரலும் ஏற்றுக்கொள்ளப்படாது.

## 6. ஆர்டிஎஸ் அமைப்பின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு

### 6.1 இந்த திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் குறைந்தபட்ச உத்தரவாத காலம் என்ன?

சூரிய ஒளி மின்னழுத்த (PV) தொகுதிகள் உற்பத்தி செய்யும் உச்ச வாட் திறனி 12 ஆண்டுகளின் முடிவில் 90% க்கும் குறைவாகவும் மற்றும் 25 ஆண்டுகள் முடிவில் 80% க்கு குறைவாகவும் இருக்கக்கூடாது. இதற்கு உத்திரவாதம் வழங்கப்பட வேண்டும்.

ஆர்டிஎஸ் அமைப்பின் இயந்திர அமைப்புகள், மின்சார வேலைப்பாடுகள், மின்சாரம் சீராக்கி/ இன்வெர்ட்டர்கள், சார்ஜ் கன்ட்ரோலர்கள், கண்காணிப்பு அலகுகள், விநியோக பலகைகள், டிஜிட்டல் மீட்டர்கள், சுவிட்ச் கியர்கள், சேமிப்பு பேட்டரிகள் ஆகியவற்றிற்கு குறைந்தது 5 வருடங்களுக்கு உத்திரவாதம் வழங்கப்பட வேண்டும். இந்த காலகட்டத்தில் ஏற்படும் எந்தவொரு உற்பத்தி, வடிவமைப்பு அல்லது நிர்மாணம் தொடர்பான குறைபாடுகளுக்கு விற்பனையாளர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

### 6.2 கிரிட்–இணைக்கப்பட்ட ஆர்டிஎஸ் அமைப்பின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு அம்சங்கள் என்ன?

மற்ற மின் உற்பத்தி தொழில்நுட்பங்களுடன் ஒப்பிடும்போது, ஆர்டிஎஸ் அமைப்புகளுக்கு மிகக் குறைந்த பராமரிப்பு அல்லது பழுதுபார்ப்பு தேவைகளே உள்ளன. இருப்பினும், உற்பத்தியை மேம்படுத்தவும் அமைப்பின் ஆயுளை அதிகரிக்கவும் சரியான பராமரிப்பு அவசியம்.

ஆர்டிஎஸ் அமைப்பின் மேல் தூசி, பறவை எச்சம் மற்றும் பிற குப்பைகள் படலாம். இது மின் உற்பத்தியை பாதிக்கும். எனவே ஆர்டிஎஸ் அமைப்பை சுத்தம் செய்வது ஒரு வழக்கமான பராமரிப்பு நடவடிக்கையாகும். சுத்தம் செய்யும் கால இடைவெளி உள்ளூர் நிலைமைகளைப் பொறுத்தது. சராசரியாக, 15 நாட்களுக்கு ஒருமுறை ஆர்டிஎஸ் அமைப்பை தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்ய வேண்டும்.

### 6.3 எங்கள் பகுதியில் குரங்குகள் நடமாட்டம் உள்ளது. அவை ஆர்டிஎஸ் அமைப்பை சேதப்படுமா?

சூரிய ஒளி தகடுகள் கடினமான கண்ணாடி மேற்புறங்களால் ஆனவை. எனவே குரங்குகள் அல்லது வானில் இருந்து விழும் ஆலங்கட்டி போன்றவைகளால் எளிதில் உடைந்து போகாது. வேண்டுமென்றே யாராவது கற்களை எறிந்தால் மட்டும் இவை உடையக்கூடும். தேவைப்பட்டால் ஆர்டிஎஸ் அமைப்பின் மேற்பரப்பை கம்பி வலையால் பாதுகாக்கலாம்.ஆனால் அவை அமைப்பின் மேல் நிழலை ஏற்படுத்தும் என்பதால் பொதுவாக பரிந்துரைக்கப்படுவதில்லை.




नवीन एवं
नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF
NEW AND
RENEWABLE ENERGY
सत्यमेव जयते

**Ministry of New and Renewable Energy (MNRE)**
Atal Akshaya Urja Bhawan, CGO Complex, Lodhi Road, New Delhi – 110003, India
**Contact us** @ Toll Free Number: **15555**